# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
************

**முறையீட்டு மனு எண். 183/2017/பே–1**
**ஆணை நாள் – 19–12–2018**

**திரு. ஆர். சரவணன்,**
**த/பெ திரு மு. ராமகிருஷ்ணன்,**
**48/60, தெற்கு புதுத் தெரு,**
**திருச்செந்தூர்,**
**தூத்துக்குடி மாவட்டம்.** --- **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**திருச்செந்தூர் பேரூராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம்.** --- **எதிர்மனுதரர்.**

**ஆணை.**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி, எண்.48/60, தெற்கு புதுத்தெரு என்ற முகவரியில் உள்ள திரு. R. சரவணன் த/பெ திரு.மு.ராமகிருஷ்ணன் என்பவரது 20.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 22.09.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.183/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான விளக்க அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.155/2004/நாள்,09.08.2004ன்படி தனக்கு திருச்செந்தூர் பேருந்து நிலையத்தில் கடை வழங்கப்பட்டதாகவும், 2007ல் புதிய பேருந்து நிலைய கட்டுமானத்திற்காக மேற்படி கடையினை காலி செய்து கொடுக்கப்பட்ட பின்னர், பழைய பேருந்து நிலைய கடைகளுக்கு பேரூராட்சி கடை வழங்க மறுத்ததால், சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண். 4981/2010, 4982/2010 நாள்.06.08.2010ல் தீர்ப்பு வழங்கப்பட்டதைத்

தொடர்ந்து, தனக்கு மட்டும் 4 ஆண்டுகள் கழித்து பேரூராட்சி ந.க.எண்.1083/2013/அ.2/நாள்.19.11.2014ல் பேரூராட்சி தீர்மானம் மூலம் கடை வழங்கப்பட்டதாகவும், தனது தந்தையார் அரசுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கக் கோரி 2012ல் இருந்து போராடி வருவதால், அவர் மீது கொண்ட ஆத்திரத்தில் பேரூராட்சி நிர்வாகம் வழங்கிய கடையினை, உண்மைக்கு மாறாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கடை என மாவட்ட ஆட்சியருக்கு தகவல் அளித்து, அனுமதி பெற்ற கடையினை அகற்ற நோட்டீஸ் கொடுத்ததாகவும், இது குறித்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P(MD) No.20453/2016 மூலம் வழக்கு தொடர்ந்து மேற்படி கடை ஆக்கிரமிப்பு கடை அல்ல என நிரூபணம் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் கோட்ட, மாவட்ட வருவாய் அதிகாரிகள் பேரூராட்சிக்கு அழுத்தம் கொடுத்து கடை ஆக்கிரமிப்பில் உள்ளது என திட்டமிட்டு சதி செய்து தனக்கு கடும் நெருக்கடி கொடுத்து வருவதாகவும், மேலும் 2007 முதல் இன்றுவரை கடையினை நடத்த விடாமலும் வருமானமின்றி பொருள் இழப்பும் நீதி மன்ற செலவும் ஏற்படுத்தி தன்னை பழி வாங்கி வருவதாகவும், இதற்கு கோட்ட, வட்ட, மாவட்ட அதிகாரிகளும், இவர்கள் அழுத்தம் காரணமாக பேரூராட்சி நிர்வாக அதிகாரியும் மூல காரணம் எனவும், பேருந்து நிலையத்தில் வணிக வளாகத்தில் உள்ள பிற கடைகள் அனைத்திலும் மிகப்பெரிய முறைகேடும் வருமான இழப்புகளும் உள்ள நிலையில், தன்னை பழி வாங்கும் அதிகாரிகள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கோரி தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

27.09.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

08.12.2017 நாளிட்ட திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் திரு.சரவணன், என்பவருக்கு திருச்செந்தூர் பேரூராட்சி செயல்முறை ஆணையின்படி 10 x 15 அடி நீள, அகலம் கொண்ட 150 சதுர அடி இடத்தில் 01.12.2014 முதல் 30.11.2015 முடிய பாலகம் கடை நடத்த அனுமதி வழங்கப்பட்டதாகவும், மேலும் மேற்படி குத்தகை காலம் முடிந்து நாளது தேதி வரை கால நீட்டிப்பு வாங்காமல் கடையினை நடத்தி வருவதாகவும், தற்போது திருச்செந்தூர் மாதா கோவில் தெரு எண்.31–ஏ ல் வசிக்கும் திரு. A.G.மனோகரன் என்பவரிடம் மேற்படி கடைக்கு ரூ.11,00,000/– விலை பேசியுள்ளதாக திரு.ஏ.ஜி,.மனோகரன் என்பவர் தெரிவித்துள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்து திரு.ஏ.ஜி. மனோகரன் என்பவரின் 23.11.2017 நாளிட்ட மனுவின் ஒளி நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

15.12.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரரிடம் இப்பொருள் தொடர்பான விளக்கத்தினை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 27.02.2018 அன்றும், மற்றும் முறையீட்டு மனுதாரருக்கு பேரூராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட கடையினை வாங்க உள்ளதாக தெரிவித்த திரு.ஏ.ஜி.மனோகரன் என்வரின் வாக்குமூலம் பெறும் பொருட், இம்முறைமன்ற நடுவத்தில் 28.02.2018அன்றும் ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

மேற்கண்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 27.02.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ஆர்.சரவணன் தனது வாக்குமூலத்தில், திருச்செந்தூர் பேரூராட்சி பஸ் நிலையத்தில் 1–வது எண் கடையினை மாதம் ரூ.1,500/–க்கு தரை வாடகையாக டெண்டர் போடாமல் மன்றத் தீர்மானத்தின்படி ஒதுக்கீடு செய்து பெறப்பட்டதாகவும், 2004–ஆம் ஆண்டு

தனக்கு முதலில் கடையினை கொடுத்த போது ரூ.450/–க்கு வாடகைக்கு கொடுத்ததாகவும், மேற்படி ஒதுக்கீட்டு ஆணையினை ஒரு வாரத்தில் அனுப்பி வைப்பதாகவும், 2010ல் புதிய பேருந்து நிலைய கடை கட்டப்பட்டதாகவும், அப்போது தனக்கு கடை தரவில்லை எனவும், பின்னர் பால் கடை நடத்துவதற்கு 150 சதுர அடி இடத்தில் பாலகம் நடத்த அனுமதி வழங்கப்பட்டதகாவும், இதனை செயல் அலுவலர் நேரடியாகவே வழங்கியதாகவும், 2014ல் ஓராண்டிற்கு அந்த இடம் நேரடியாகவே கொடுக்கப்பட்டு, 2015 ஆம் ஆண்டு, தான் ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிவித்து கடையினை காலி செய்யச் சொன்னதாகவும், தான் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடுத்ததாகவும், தனது கடையின் முன் ஒரு 5 அடி முன்னால் போட்ட கூரையினை நீக்கிவிட்டு தன்னை கடை நடத்திக் கொள்ளலாம் என நீதிமன்றம் ஆணையிட்டதாகவும், 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மேற்படி கடை உரிமத்தினை புதுப்பிக்கச் சொல்லி தான் மனு கொடுத்து வருவதாகவும், ஆனால் இதுவரை மேற்படி ஆணை வழங்கவில்லையெனவும், கடை வாடகையினை தான் கேட்பு காசோலை (Demand Draft) மூலமாக கொடுத்து வருவதாகவும், இதுவரை வாடகை ரசீதுகள் தரப்படவில்லையெனவும், உரிமத்தினை புதுப்பிக்க ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்வதாகவும், மேற்படி 2004ல் தனக்கு கடை ஒதுக்கப்பட்ட ஆணை மற்றும் தொடர்ந்து கடை நடத்திக் கொள்ள பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணை ஆகியவற்றினை ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைப்பதாக முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனக்கு பேரூராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட கடைக்கான ஆணை, 06.08.2010 நாளிட்ட மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் நகல் ஆகியவற்றுடன் தனக்கு ஒதுக்கப்பட்ட கடையினை திரு.ஏ.ஜி.மனோகரன் என்பவரிடம் விலை பேசியதாக தெரிவிக்கப்பட்ட புகாருக்கான மறுப்பினையும் தெரிவித்துள்ள 03.03.2018 நாளிட்ட கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2018ல் பெறப்பட்டது.

06.03.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 08.12.2017 நாளிட்ட கடிதத்துடன் வரப்பெற்ற திரு.ஏ.ஜி.மனோகரன் என்பவரின் புகார் மனு தொடர்பான விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 28.02.2018ல் ஆஜராக கோரி அழைப்பாணையிடப்பட்டும், மேற்படி நபர் ஆஜராகாத நிலையில் மேற்படி மனுவின் உண்மைத் தன்மை போலியாக இருக்குமென இம்முறைமன்ற நடுவம் கருதுவதால், மேற்படி நபர் விசாரணைக்கு ஆஜராகாமைக்கான விளக்கத்தினை பெற்று அனுப்பி வைக்குமாறும், மேற்படி மனுவின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர் மீது ஏன் காவல் துறையில் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதற்கான விளக்கத்தினை சமர்ப்பிக்கவும், முறையீட்டு மனுதாரர் மற்றும் பிற பேரூராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலங்கள் மற்றும் குத்தகை உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டமைக்கான அனைத்து விவரங்களைடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் 07.03.2018 நாளிட்ட புகார் மனுவில் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) தான், தனது முறையீடு தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரானதைத் தொடர்ந்து, திருச்செந்தூர் பேரூராட்சி செயல்

அலுவலர் 07.03.2018 அன்று தனது கடைக்கு வந்து பல பேர் முன்னிலையில் தன்னை தரக்குறைவாக பேசியும், தனது கடையினை காலி செய்யாமல் விடமாட்டேன் என தெரிவித்துள்ளதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

14.03.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் 03.03.2018 மற்றும் 07.03.2018 நாளிட்ட கூடுதல் புகார் மனுக்களை திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான விளக்கங்களை தனித்தனியாகவும், மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம் விடப்பட்ட விவரங்களையும் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் 12.04.2018 (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) நாளிட்ட கடிதத்தில், திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் 07.03.2018 அன்று 10 ஆட்களுடன் தனது கடைக்கு வந்து தன்னை மிரட்டிச் சென்றதாகவும், இதனைத் தொடர்ந்து இன்று (11.04.2018) மாலை 4.00 மணி அளவில் பேரூராட்சி செயல் அலுவலர், வட்டாட்சியர், வட்டக் காவல் ஆய்வாளர், சுகாதார மேற்பார்வையாளர், மற்றும் தற்காலிக பணியாளர்கள் 20 நபர்களுடன் வந்து தனக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் செய்யாமலும், ஒரு நிமிட அவகாசம் கூட கொடுக்காமலும், தனது 10 x 15 கடையினை கடப்பாரையால் இடித்தும், JCB மூலம் நொறுக்கியும் லாரிகளில் அள்ளிச் சென்றதாகவும், இதன் மூலம் கடையில் இருந்த பொருட்களும் கூட்டத்தோடு கூட்டமாக அள்ளி சென்றதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் 04.05.2018 நாளிட்ட கடிதத்தில் (மின்னஞ்சல் மூலம் 05.05.2018ல் பெறப்பட்டது) தான், திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் பொய்யான புகாரின் அடிப்படையில் 13.04.2018ல் கைது செய்யப்பட்டதாகவும், மேற்படி புகார் பொய் என நிரூபிக்க தனக்கு 13.04.2018 நாளிட்ட திருச்செந்தூர் பேரூராட்சியின் கண்காணிப்பு கேமரா பதிவுகளை பேரூராட்சி செயல் அலுவலர் அழிக்க முயற்சிப்பதாகவும், தனக்கு மேற்படி பதிவுகள் கிடைக்க உதவி புரியுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள பொருட்பாடு/நிகழ்வு குறித்து ஏற்கனவே குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றம் மூலம் இது குறித்து தீர்வுகாண தெரிவித்து 11.05.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

11.05.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 03.03.2018 மற்றும் 07.03.2018 ஆகிய தேதிகளில் வரப்பெற்ற கூடுதல் புகார் மனுக்களுக்கான விளக்க அறிக்கை, 28.02.2018 அன்று முறையீட்டு மனுதாரரின் கடையினை விலை பேசியதாக தெரிவிக்கப்பட்ட திரு.ஏ.ஜி.மனோகரன் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாத நிலையில், அவர் ஆஜராகாமைக்கான விளக்கம் மற்றும் இது குறித்து காவல் துறையில் புகார் செய்து எடுக்கப்பட்ட நடவடிக்கை, மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம் விடப்பட்ட விவர அறிக்கை, மற்றும் முறையீட்டு மனுதாரரின் 05.03.2018 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தில் பேரூராட்சி மூலம் அளிக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் 13.04.2018ல் தான் கைது செய்யப்பட்டதாகவும், மேற்படி நாளைய கண்காணிப்பு கேமரா பதிவுகளை பேரூராட்சி செயல் அலுவலர் அழிக்க முயற்சிப்பதாக தெரிவித்துள்ள விவரங்களுக்கான விரிவான

அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.07.2018 நாளிட்ட அறிக்கையில் 12.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் தெரிவித்துள்ள திரு.ஏ.ஜி.மனோகரன் என்பவர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாமைக்கான அவரின் எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று அனுப்பியுள்ளதாகவும், மேலும், திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையக் கடைகள் மற்றும் வணிக வளாக கடைகள் ஏலம் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான கோப்புகள் 2001–02 முதல் 2013–14 வரை அனைத்தும் தூத்துக்குடி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கோப்புகள் பெறப்பட்டவுடன் விவரங்கள் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி ந.க.எண். 1083/2013/அ.2/நாள்.5/2014ன்படி திரு.சரவணன் என்பவருக்கு, திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகத்சிங் பேருந்து நிலையத்தில் 10 x 15 அளவிலான இடத்தினை பாலகம் நடத்திட தரை வாடகை அடிப்படையில் 01.12.2014 முதல் 30.11.2015 முடிய உள்ள காலத்திற்கு உரிமம், நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டதாகவும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அவசரக் குறிப்பாணை ந.க.எண்.1956/2016/ப.3/நாள்.08.07.2016ல் திரு.சரவணன், திருச்செந்தூர் என்பவர் சிறப்பு நிபந்தனைகள் எதுவும் சரிவர கடைபிடிக்காமல் 150 சதுர அடி வழங்கப்பட்டதில் கூடுதலாக 100 சதுர அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கடை அமைத்தும், விதிமுறைகளுக்கு முரணாக பாலகம் அமைக்காமல் தற்போது பேன்சி மற்றும் கூல் டிரிங்ஸ் கடை நடத்தி வந்ததால் ஏற்கனவே திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிவிப்பின்டி உரிமம் ஏன் ரத்து செய்யக் கூடாது என 06.07.2016ல் அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது வரையிலும் சம்பந்தப்பட்ட குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க செயல் அலுவலருக்கு மனு ஏதும் செய்யப்படவில்லையெனவும், எனவே சம்பந்தப்பட்ட கடை உரிமம் சம்பந்தமாக குத்தகைதாரர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறி செயல்பட்டு வந்ததாலும், 31.12.2015க்கு பிறகு கடையின் உரிமம் புதுப்பிக்காததாலும், 21.10.2016க்குள் உரிய விதிமுறைகளை பின்பற்றி கடையினை அப்புறப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் குறிப்பாணையின் அடிப்படையில் திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிவிப்பு எண். 30/2015/அ.1/நாள் 19.10.2016ன்படி உரிமம் ரத்து செய்யப்படுகிறது எனத் தெரிவித்தும், மூன்று தினங்களுக்குள் தரை வாடகை கடையினை அப்புறப்படுத்தி பேரூராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதாகவும் தவறும் பட்சத்தில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 ன்படி நடவடிக்கை மேற்கொண்டு உரிய விதிகளின்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படும் எனத் தெரிவித்தும், இதனால் ஏற்படும் செலவினத்தினை உரிமதாரரிடம் வசூலிக்க நேரிடும் எனவும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கடையினை அப்புறப்படுத்தி பேரூராட்சியிடம் ஒப்படைக்காததாலும், பேரூராட்சி செயல் அலுவலர் நேரில் சென்று கடையினை அப்புறப்படுத்த பலமுறை அறிவுறுத்தப்பட்டும் மேற்படி முறையீட்டு மனுதாரர் தரை வாடகை கடையினை அப்புறப்படுத்தாததால், மேற்படி அனுமதியின்றி நடத்தப்படும் கடையினை 11.04.2018 அன்று

அகற்ற வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் காவல்துறை ஆய்வாளர் ஆகியோர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, 11.04.2018 அன்று வட்டாட்சியர் அவர்களின் தலைமையில் காவல்துறை ஆய்வாளர்களின் முன்னிலையில் மேற்படி கடை அகற்றப்பட்டுவிட்டதாகவும், மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது முக நூல் பக்கத்தில் பல அவதூறான வார்த்தைகளில் தன்னையும் தனது பதவியினையும் தவறாக சித்தரித்து வெளியிட்டுள்ளதாகவும், இச்செய்திகளை பார்த்த பலர் தன்னிடம் கேட்டதால் தனக்கு மிகவும் அவமானம் ஏற்பட்டுள்ளதாகவும், 13.04.2018 அன்று தானும், பேரூராட்சி பணியாளர்கள் சிலரும் மேற்படி பகத்சிங் பேருந்து நிலையத்தின் பின்புறம் உள்ள கே.பி.கே.சிலை பின்புறம் குடிநீர் தொட்டி அமைக்க பார்வையிடும்போது, மேற்படி முறையீட்டு மனுதாரர் தன்னை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், தன்னை பயமுறுத்தியதாகத் தெரிவித்தும், அதனடிப்படையில் 13.04.2018 அன்று திருச்செந்தூர் காவல் நிலையத்தில் முறையீட்டு மனுதாரர் மீது புகார் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து திருச்செந்தூர் காவல் துறையினரால் மேற்படி நபர் கைது செய்யப்பட்டு நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுதாரர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண்.7215/2018 மற்றும் வழக்கு எண். W.P.No.13974/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நபர் பேரூராட்சி பணியாளர்களை மிரட்டி தனக்கு கடை கேட்டு வருவதாகவும், தினசரி பல்வேறு விவரங்களை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கோரி தன்னை பணி செய்ய விடாமல் தடுத்து வருவதாகவும் திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

28.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 11.10.2018 நாளைய விசாணைக்கு உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளுடன் ஆஜராகத் தெரிவித்து திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது 26.09.2018 நாளிட்ட மற்றுமொரு முறையீட்டு மனுவில் தான் ஏற்கனவே 26.09.2017ல் தெரிவித்த புகார்களையே தெரிவித்து ஒரு முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

11.10.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் திரு.சரவணன் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், இவர் தொடர்ந்து புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும், இவரது கடையினை தான் காலி செய்துவிட்டதால் அந்த ஆதங்கத்தில் தன் மீது புகார் அனுப்புவதாகவும், தினமும் காலையில் பேரூராட்சி அலுவலகம் திறக்கும் முன்னர் வந்து பேரூராட்சி அலுவலகத்தில் என்ன நடக்கிறது என கண்காணிப்பது அவரது முழு பணி எனவும், மேலும் திரு.ஆர்.சரவணன், முறையீட்டு மனுதாரரால் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் கீழ்க்கண்ட வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையாக உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

1. வழக்கு எண். W.P.No. 7215/2018. – கடை உரிமம் புதுப்பித்து தருதல் தொடர்பாக
2. வழக்கு எண்.W.P.(MD)No. 13974/2018. – கடையினை அகற்றியமைக்கான இழப்பீடு கோருதல்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் கோரிய திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட கடைகள் ஏலம்/குத்தகை புதுப்பிப்பு தொடர்பான விவரங்களில் ஆண்டு வாரியான/கடை வாரியான/தொகை வாரியான விவரங்களை அலுவலக ஆவணங்களை சரிபார்த்து ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிப்பதாகவும், மேற்படி முறையீட்டு மனுதாரரின் தந்தையான திரு.இராமகிருஷ்ணன் என்பவரின் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட 35 எண்ணிக்கையிலான புகார்களுக்கு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் அறிவுரையின்படி அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்தும் கள ஆய்வு மேற்கொண்டும் விரிவான இறுதி அறிக்கையினை உரிய ஆதார ஆவணங்களுடன் ஒரு வாரத்தில் சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 25.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 11.10.2018 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்ட அறிக்கைகளை உடன் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 07.12.2018 நாளிட்ட கடிதத்தில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் முறையீட்டு மனுதாரரது தந்தை திரு.வி.இராமகிருஷ்ணன், என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண், crl.O.P(MD) No. 5582/20104ல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பின்படி, முந்தைய ஆண்டுளுக்கான கடைகள் ஏலம் தொடர்பான வழக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டதாகவும், இதனடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரின் கடித எண்.PE.37/2014/RDP/TK ன்படி வழக்கு தொடரப்பட்டு மேற்படி துறையின் 08.05.2014 மற்றும் 16.02.2018 நாளிட்ட கடிதங்களின்படி, திருச்செந்தூர் பேரூராட்சி கடை வாடகை தொடர்பான 1999–2000 முதல் 2017–18 வரை பல்வகை கேட்பு பதிவேடுகள் கோப்புகள் அனைத்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி விசாரணை முடிவுற்று பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் முழுமையான அளவில் விவரம் அனுப்பி வைக்கப்படும் எனவும், திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 04.12.2018 நாளிட்ட கடிதத்தில் திரு.ஏ.ஜி.மனோகரன் என்பவர் புகார் மனு குறித்து விசாரணை செய்து அறிக்கை அளிக்க திருச்செந்தூர் காவல் துறை ஆய்வாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம், 07.12.2018 நாளிட்ட திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் திரு.ஆர்.சரவணன், தனக்கு திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் மீண்டும் கடை வழங்கக் கோரியும், ஏற்கனவே இருந்த கடையினை பேரூராட்சி நிர்வாகத்தால் அகற்றப்பட்டமைக்கான இழப்பீடு கோரியும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நீதிப் பேராணை எண்கள் முறையே 7215/2018 மற்றும் 13974/2018 ன் மூலம் இரு வழக்குகள் தொடர்ந்துள்ளதாக திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 11.10.2018 நாளிட்ட வாக்குமூலத்தில் மேற்படி நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ள விவரம்

தெரிவிக்கப்பட்டு, வாதுரைகளின் நகல்களும் சமர்பிக்கப்பட்டுள்ளன. எனவே 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) ன் படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது என்பதால் இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவம் ஆணை ஏதும் பிறப்பிக்க இயலாது.

இருப்பினும் பேரூராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம்/குத்தகை தொடர்பான ஆவணங்கள் 1999–2000 முதல் 2017–2018 வரையிலானவை நீதி மன்ற ஆணைப்படி திருச்செந்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 07.12.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பினும், நடப்பு ஆண்டில் மேற்படி கடைகளுக்கான ஏலங்கள் உரிய விதிமுறைகளின்படி நடத்தப்பட்டு, பேரூராட்சிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாததை உறுதி செய்திடவும், ஏல நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்ட வருவாய் விவரங்களடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்கவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடுவதுடன், இது குறித்து திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கூர்ந்து கண்காணித்திட தெரிவித்தும் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக.

19/12/18

பெறுநர்

1.திரு. ஆர். சரவணன்,
த/பெ திரு மு. ராமகிருஷ்ணன்,
48/60, தெற்கு புதுத் தெரு,
திருச்செந்தூர்,
தூத்துக்குடி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
திருச்செந்தூர் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ. பி.காலனி, ஜவஹர் நகர்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி – 627007.